நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள், சேப்பாக்கம், சென்னை – 5

முன்னிலை: டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப.,

ந.க.எண். 53548/08/எச்3 நாள். 23.10.2008.

பொருள்: பணிக்குழு – தமிழ்நாடு நகராட்சி மருத்துவப்பணி – டாக்டர் என்.உமயாள், மருத்துவ அலுவலர் – ஆவடி நகராட்சியிலிருந்து ஆலந்தூர் நகராட்சிக்கு மாறுதல் செய்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 21287/2008/எச்3 நாள். 24.04.2008.
2. டாக்டர் என். உமயாள், மருத்துவ அலுவலர், ஆவடி நகராட்சி மாறுதல் விண்ணப்பம் நாள். 20.10.2008.

❖❖❖

உத்திரவு:

நிர்வாக நலன் கருதி தமிழ்நாடு நகராட்சி பணிவிதி 1970–ன்கீழ் பொதுவிதி 31(சி)–ன்படி ஆவடி நகராட்சி மருத்துவ அலுவலர் திருமதி என்.உமயாள் அவர்களை ஆலந்தூர் நகராட்சி மருத்துவ அலுவலர் திருமதி செல்விகணேசன் இரண்டு வருட கால பட்ட மேற்படிப்பிற்காக பார்வையில் கண்ட செயல்முறைகளின்படி விடுவித்து உத்தரவிடப்பட்டதால் ஏற்பட்ட காலியிடத்தில் மாறுதல் செய்து உத்தரவிடப்படுகிறது.

திருமதி செல்விகணேசன் பட்டமேற்படிப்பு முடிந்து பணி அறிக்கை சமர்ப்பிக்கும்போது அவருக்கு தனியாக உத்தரவு பிறப்பிக்கப்படும்.

திருமதி என்.உமயாள், மருத்துவ அலுவலரது விண்ணப்பத்தின்பேரில் அன்னாருக்கு மாறுதல் வழங்கப்படுவதால், மாறுதல் பயணப்படி பெற தகுதியற்றவராகிறார்.

ஆவடி நகராட்சி ஆணையர் திருமதி என். உமயாள் மருத்துவ அலுவலரை உடனடியாக பணியிலிருந்து விடுவித்து அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஆலந்தூர் நகராட்சியில் டாக்டர் என். உமயாள், மருத்துவ அலுவலர் பணியில் சேர்ந்த விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி ஆலந்தூர் நகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இச்செயல்முறை உத்தரவினை பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

23/10/2008

நகராட்சி நிர்வாக ஆணையருக்காக

23/10/08

பெறுநர்

திருமதி டாக்டர் என். உமயாள்,
மருத்துவ அலுவலர்,
ஆவடி நகராட்சி (ஆணையர் மூலமாக)

திருமதி டாக்டர் செல்விகணேசன்,
மருத்துவ அலுவலர் (விடுப்பு)
ஆலந்தூர் நகராட்சி (ஆணையர் மூலமாக)

நகராட்சி ஆணையர்,
ஆவடி/ ஆலந்தூர் நகராட்சி

மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
செங்கல்பட்டு